**தமிழ்நாடு அரசு**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

**வட்டாட்சியர் அலுவலகம், ஆம்பூர் வட்டம்,**

**திருப்பத்தூர் மாவட்டம்**

**அறிவிக்கை எண் .அ1/1301/2025-02** **நாள் : 26.09.2025**

திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகில், ஆம்பூர் வட்டத்தில் காலியாக உள்ள 01 கிராம உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் நியமனம் செய்வதற்காக இவ்வலுவலக அறிவிக்கை எண் அ1/1301/2025, நாள் 22.07.2025-ன் படி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்நேர்வில் தற்போது அதிகபட்ச வயது வரம்பு தளர்வு செய்துள்ளதால் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**(குறிப்பு: இவ்வலுவலக அறிவிக்கை எண் அ1/1301/2025, நாள் 22.07.2025-ன்படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை).**

| | | | |
|---|---|---|---|
| 1) | விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | : | 29.09.2025 |
| 2) | விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | : | 13.10.2025 மாலை 5.45 மணிவரை.. |
| 3) | படித்தல் மற்றும் எழுதுதல் திறனறித் தேர்வு நடைபெறும் நாள் | : | 12.11.2025 (மாறுதலுக்குட்பட்டது) |
| 4) | நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | : | 27.11.2025 (மாறுதலுக்குட்பட்டது) |

ஊதிய விகிதம் : சிறப்பு காலமுறை ஊதியம் – ரூ.11,100 – 35,100/-

**விண்ணப்பிக்க தகுதிகள்**

**1. கல்வித்தகுதி** : தமிழ்நாடு அரசுத்தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு (10 ஆம் வகுப்பு) சான்றிதழ் தேர்வில் (SSLC* – Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (தேர்ச்சி / தோல்வி) (குறிப்பு SSLC –Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

**2.வயது** (01.07.2025 அன்று)

| வ.எண் | இனம் | குறைந்தபட்சவயது (முடிவடைந்து இருக்கவேண்டும்) | அதிகபட்சவயது (முடிவடைந்து இருக்கவேண்டும்) |
|---|---|---|---|
| 1 | இதர பிரிவினர் பொதுப்பிரிவினர் | 21 | 32 |
| 2 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் / பிற்பட்ட வகுப்பினர் / பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 21 | 39 |
| 3 | அட்டவணை வகுப்பினர் / அட்டவணை வகுப்பினர்(அருந்ததியனர்/ பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை (எந்த பிரிவினராக இருந்தாலும்) | 21 | 42 |

**மாற்றுத் திறனாளிகளுக்கு**

மாற்றுத்திறனாளிகள் நிர்ணயிக்கப்பட்ட வயதுவரம்பிற்கு மேல் 10 ஆண்டுகள் வரை வயதுவரம்புச் சலுகை பெற தகுதியுடையவர்கள்.

**முன்னாள் இராணுவத்தினருக்கு(01.07.2025 அன்று)**

பொதுப்பிரிவினர்- அதிகபட்சம் 50 வயது

இதரப்பிரிவினருக்கு- அதிகபட்சம் 55 வயது

**3. தேர்வு முறை**

1. மிதிவண்டி/இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதும் திறன்
2. நேர்காணல்

**4. காலிப்பணியிடங்கள் : 01**

நிரப்பப்படவுள்ள கிராமங்களின் இனசுழற்சி விவரம்

| வ.எண் | இன சுழற்சி எண் | நிரப்பப்படும் கிராமத்தின் பெயர் | இனசுழற்சி விவரம் |
|---|---|---|---|
| 1 | 43 | **சின்னவரிக்கம்** | **மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / பெண்கள் / முன்னுரிமையற்றவர்**<br>MBC/DNC / WOMEN / NON PRIORITY |

**5. விண்ணப்பிக்கும் முறை**

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை திருப்பத்தூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் (https://tirupathur.nic.in)-ல் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களுடன் அலுவலக வேலை நாட்களில் ஆம்பூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணி வரை நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பம் செய்ய வேண்டிய முகவரி

"வருவாய் வட்டாட்சியர்"
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆம்பூர் வட்டம் - 635802,
திருப்பத்தூர் மாவட்டம்.

குறிப்பு : 1. கூடுதல் விவரங்களுக்கு (https://tirupathur.nic.in) என்ற இணையதளத்தினை பார்க்கவும்.

2.தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் / எழுதுதல் திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

3. நேரம் கடந்து வரும் எந்த விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது.

வட்டாட்சியர்,
ஆம்பூர் வட்டம்